| | | |
|---|---|---|
| **O.S No.** | **:** | **157/2018** |
| **DATE** | : | **17.11.2025** |
| **பெயர்** | : | **கணேஷ்** |
| **தந்தை பெயர்** | : | **லட்சுமிபதி** |

**பிரதிவாதி தரப்பு வா.சா.1 குறுக்கு விசாரணை**

**1.** நான் சென்னையில் நிரந்தரமாக குடியிருந்து வருகிறேன். தாவா சொத்து இருக்கும் ஏனாத்துார் கிராமம் அல்லது காஞ்சிபுரத்தில் குடியிருக்கும் வீடு வேறு எதுவும் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது ஆவணத்தை பார்த்து தான் சொல்ல முடியும். தாவா சொத்தின் வடக்கின் 8.4 மீட்டர், தெற்கு 6.4 மீட்டர், கிழக்கு 33 மீட்டர், மேற்கு 31.4 மீட்டர் அளவுகள் கொண்டது. ஜக்குபந்தி தெரியாது. A அட்டவணை சொத்திற்கும் B அட்டவணை சொத்திற்கும் ஜக்குபந்திகளில் வேறுபாடு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பி அட்டவணைப்படி சுவாதின மீட்பு கேட்கப்பட்டுள்ளது அதில் நான்கு எல்லைகளின் அளவுகள் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் தெரியாது. எவ்வளவு சதுரடிக்கு சுவாதின மீட்பு கேட்டுள்ளோம் என்று தெரியாது.

2. தாவா சொத்தை ராஜகாந்தன் என்பவரிடம் இருந்து வாங்கினேன். தாவா சொத்தை வாங்கும் போது வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் நான்கு எல்லைகளின் அளவுகளும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ராஜகாந்தனுக்கு எவ்வாறு சொத்து வந்தது என்றால் எனது ஆவணத்தை நான் சரியாக படிக்கவில்லை அதன் விவரங்கள் புரியவில்லை. வா.சா.ஆ1 விடுதலை பத்திரத்தில் நான்கு எல்லைகளின் அளவுகள் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, வரைபடத்தில்

சரியாக உள்ளது. ராஜகாந்தன் வகையராவிற்கு சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்ற விவரம் தெரியாது.

3. சர்வே எண் 452/7சி என்பதை வாங்கியுள்ளோம், அந்த 452/7ன் மொத்த விஸ்தீரனம் தெரியாது. பகுதிகளாக விற்கப்பட்ட 452/7ல் யார் யார் எல்லாம் சொத்து வாங்கியுள்ளார்கள் என்ற விவரம் தெரியாது. ஜக்குபந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லிமுத்து என்பவருக்கு சொத்து எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது. 452/7 என்பதற்கு கூட்டு பட்டா அல்லிமுத்து மற்றும் கம்பீரம் ஆகியவர்கள் பெயரில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. பட்டா எண் 599ல் சர்வே எண் 452/7சி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. நான் 452/7சி வாங்கினேன், அப்போது 7ஏ, 7பி யாரிடம் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பே அல்லிமுத்து என்பவர் சர்வே எண் 452/7ல் இரண்டு செண்ட்டை சுகுணா, மேலும் 3 செண்ட் இடத்தை குணசேகரன் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

5. வா.சா.ஆ–5 வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன், அதில் எனது கிரைய பத்திரம் மட்டும் காணப்படுமாறு தாக்கல் செய்துள்ளேன், அது எந்த தேதியில் இருந்து எந்ததேதி வரைக்கான வில்லங்க சான்றிதழ் என்றால் 2007ல் இருந்து 2018 வரை உள்ளதை தாக்கல் செய்துள்ளேன். வில்லங்க சான்றிதழை முழுவதுமாக தாக்கல் செய்யாமல் எனது பத்திரத்திற்கான பகுதியை மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

6. வா.சா.ஆ– 6 வழக்கறிஞர் அறிவிப்பில் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ–6ன் அலுவலக நகலின் பிரதிவாதிக்கு கிடைக்கப்பெற்ற அசல் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு அது தான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்று சாட்சி ஒப்புக் கொண்டதன் அடிப்படையில்

மேற்படி ஆவணம் அசல் **பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் இவ்வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.